# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

**2018ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம்.**

----

**பொருள் – 1**

நகராட்சி ஆணையர் அவர்களின் ஜுலை – 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் – 2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுலை – 2018 ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் – 3**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள 160 கே.வி.கே ஜெனரேட்டர் பழுதின் காரணமாக இயக்க முடியாமல் உள்ளது. மேற்படி 160 கே.வி.ஏ ஜெனரேட்டார் பழுதுகளான Automatic starter timer unit charging, Batter change, carrier panel conductor, Terminal conductor, oil change, filter change Indicater. Generator General Service, Tread and Bolt, Coolant Oil, Coolant water mixture ஆகிய பழுதுகளை சரி செய்து 160 கே.வி.எ ஜெனரேட்டரை சர்வீஸ் செய்து இயங்க வைக்க உத்தேச செலவினம் ரூ.60,000/–யை வரும் மழைகாலத்தினை கருத்தில் கொண்டு உடன் பழுதுகளை சரி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் – 4**

செங்கல்ப.டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்று நிலையங்களில் 8 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் மற்றும் 3 உறிஞ்சு கிணறு உள்ள மின் மோட்டார்கள் மூலம் குடிநீர் உறிஞ்சப்பட்டு தலைமை நீரேற்று நிலையத்தின் அருகில் உள்ள 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்தேக்க தொட்டியில் குடிநீர் சேகரிக்கப்பட்டு அத் தொட்டியில் உள்ள 2 எண்ணிக்கை 60 எச்.பி. நீர்மூழ்கி மின் மோட்டார் பழுது ஏற்படும் காலங்களில் Spare Motor 80 எச்.பி. நீர்மூழ்கி மோட்டார் கொண்டு இயக்கப்படுகிறது. மேலும் 80 எச்.பி.

மோட்டருக்கான ஸ்டார்டர் stand and delta ஸ்டார்டர் Automative அமைப்புடன் கூடிய Oil Tanker புதியதாக வாங்கி 80 எச்.பி. மின் மோட்டார்களை இயக்கும் வண்ணமாகவும், மேற்படி குடிநீர் அத்தியாவசிய பணியினை முன்னிட்டும் வரும் மழைகாலங்களை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கு புதியதாக 100 எச்.பி திறன் கொண்ட Star and Delta Starter வாங்க உத்தேசமான தொகை ரூ.1.96 இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குடிநீர் பணியின் அவசியம் கருதி குடிநீர் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளலாம்.

**பொருள் – 5**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான அலுவலகத்தில் உள்ள 62.5 கே.பி.எ ஜெனரேட்டர் பழுது ஏற்பட்டதன் காரணமாக இயக்குவதில் மற்றும் நிறுத்தம் செய்வதில் உள்ள On/OFF Automatic Starter Control timer Unit பழுது ஏற்பட்டு இயக்கமுடியாமல் உள்ளது. எனவே மேற்படியான ஜெனரேட்டர் உள்ள Automatic Control Starter Unit and On/Off. Oil Change, Filter Change, Collant water timer, General Service Belt ஆகியவை மாற்றி அவ்வேலை செய்து இயக்கத்தில் வைக்கவும் வரும் மழைகாலத்தினை கருத்தில் கொண்டு உடன் பழுதினை சரி செய்ய தோராய செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் ஏற்கலாம். குடிநீர் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளலாம்.

**பொருள் – 6**

செங்கல்பட்டு நகராட்சியின் மூலம் தற்போது திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு பணிகள் இத்துடன் பொது சுகாதாரப் பணிகள் வெகுவிமர்சியாக செய்யப்பட்டு அதன் விவரங்கள் தினசரி பத்திரிக்கையில் செய்தியாக வெளிவருகிறது. இந்நிலையில் இதனை அறிந்து கொள்ளும் பொருட்டு இந் நகராட்சியின் பயன்பாட்டிற்கு தினசரி தமிழ் செய்தி தாள்கள் (தினகரன், தினமலர், தினதந்தி மற்றும் தமிழ்முரசு) வாங்க வேண்டி உள்ளதால் இதனை சம்மந்தப்பட்ட ஏஜென்சியிடம் இருந்து வாங்கவும் அதற்கான செலவுத் தொகை பொது நிதியில் இருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுலக குறிப்பு–

மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 7

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் தினசரி காய்கறி நாளங்காடிக்கு 2018–19ம் ஆண்டு குத்தகை உரிமத்திற்காக ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் 6.2.2018 ம் தேதியன்று நடத்தப்பட்டது. அதனை தொடர்ந்து 2015–16 முதல் 2017–18ன் குத்தகைதாரர் திருமதி வி. என். கவிதா என்பவர் மேற்படி குத்தகை இனத்திற்கு ஏலம் நடத்துவதற்கு தடை கோரி உயர் நீதிமன்றம், சென்னையில் வழக்கு தொடர்ந்தார். மேற்படி குத்தகை இனத்திற்கான வழக்கு தற்போது நகராட்சிக்க சாதகமாக வரப்பெற்றள்ளது. எனவே மேற்கண்ட குத்தகை இனம் 1) தினசரி காய்கறி நாளங்காடியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2) பேறிஞர் அண்ணா பேரூந்து நிலையத்தில் வந்து செல்லும் பேரூந்துகளிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம், 3) செங்கல்பட்டு தசரா வரி வசூல் உரிமம் ஆகிய குத்தகை இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நடத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி ஒப்பந்தபுள்ளி நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் பின்னேற்ப்பு வழங்கலாம்.

பொருள் – 8

அரசு ஆணை எண். 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.7.2018ல் 1.4.2018 முதல் சொத்துவரி சீராய்வு 50 சதவீதத்திற்கு மிகாமலும் வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்திட அனுமதிக்கப்பட்டது. இந் நிலையில் அரசு ஆணை எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.7.2018 ல் எற்கனவே வழங்கப்பட்ட அரசாணையில் உத்திரவிடப்பட்ட வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு மட்டும் 100 சதவீதத்திற்கு மிகாமல் என்பதை தற்போது 50 சதவீதத்திற்க மிகாமல் சொத்து வரி உயர்வு செய்திட திருத்திய உத்திரவு வாங்கி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின் விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) பதிவு செய்யலாம்.
2) அரசாணையின்படி 1.4.2018 ம் தேதி முதல் சொத்துவரி சீராய்வு செய்திட அனுமதிக்கலாம். வரி சீராய்வு செலவினத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 9

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கும் இந் நகராட்சியின் நகர மன்ற தீர்மானம் எண். 451 நாள் 27.5.2018 ல் உள்ளவாறு தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான தொகை ரூ.8891/– மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ததற்கான தொகை ரூ.4200/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. மேலும் 1.10.2018 ல் மேற்படி தொழில்வரி தொகை உயர்வு செய்து வசூல் செய்வதற்கான அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் முன் அனுமதி வாங்கலாம்.

பொருள் – 10

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 20555/2018/ஆர்1 நாள் 30.7.2018ன்படி இந் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள குடியிருப்பு கட்டிடங்கள், குடியிருப்பில் வாடகை பயன்பாட்டில் உள்ள கட்டிடங்கள் மற்றும் வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு அரசாணை எண். 73 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.7.2018 மற்றும் அரசாணை எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.7.2018ன் படியும் 2018–19ம் ஆண்டு சொத்துவரி சீராய்வு செய்வதற்கான சுயமதிப்பீட்டு படிவம் மற்றும் தேவைான இதர படிவங்களை கூட்டுறவு அச்சகத்தில் அச்சிட்டுக் கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) சொத்துவரி சீராய்வுக்கு அவசர அவசியம் கருதி படிவங்கள் அச்சிட்டுக் கொள்ள தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

பொருள் – 11

இந் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை கடைகள் மற்றும் குத்தகை இனங்களில் 2007ம் ஆண்டு முதல் சேவை வரி தொகை செலுத்த வேண்டும் என மத்திய சேவை வரி நிறுவனத்தினரிடமிருந்து வரப்பெற்ற ஆணைக்கெதிராக இந் நகராட்சியின் சார்பாக மேல்முறையீடு செய்து அதன் தொடர்புடைய பணிகளுக்காக ஆஜராகி வரும் சென்னை உயர்நீதிமன்ற அரசு

வழக்கறிஞர் திரு பி. சீனிவாஸ் அவர்களுக்கு வழக்காடு கட்டணத் தொகை ரூ.25,000/—ம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 800/2014/அ1)

பொருள் – 12

செங்கல்பட்டு நகர சிற்பி சிங்காரவேலர் மீன் வளர்ப்போர் மற்றும் மீன் விற்பனை வட்டுறவு சங்கத்தின் தலைவர் திரு பி. சீனிவாசன் என்பவர் சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண். டபள்யு.பி.எண்.2295 /2018 ல் நகர அளவு எண். 409 நகராட்சி பயனியர் விடுதி இருக்கும் இடத்தில் மீன்மார்கெட் அமைக்க இடம் ஒதுக்கிதரக் கேட்டுள்ளார். இந் நிலையில் இவ் வழக்கினை இறுதி செய்து சென்னை உயர்நீதி மன்றம் 6.2.2018ல் இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. இவ்வழக்கினை எதிர்த்து இந் நகராட்சி சார்பில் திரு பி. சீனிவாஸ் சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் ஆஜராகி உள்ளதால் அதற்கான வழக்கு கட்டணம் ரூ.10,000/—த்தினை வழங்க கேட்டுள்ளதால் இத் தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண். 2775/2017/எப்1)

பொருள் – 13

இந் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் தினசரி காய்கறி நாளங்காடிக்கு இந் நகராட்சி மூலம் துறை வசூல் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அதற்கு தேவையான இரசீது புத்தங்கள் அச்சிட்டு வழங்க கோரி உள்ளூர் அச்சங்களில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

1) பிரபாகரன் பிரிண்டிங், க.எண். 02, முருகப்பா தெரு,
   திருவல்லிகேணி, சென்னை—5
   ஒரு புத்தகத்தின் மதிப்பு = ரூ.18/—
2) பிரீத்தி பிரஸ், எண்.23, பஜார் தெரு, மானாமதி,
   திருப்போரூர் தாலுக்கா
   ஒரு புத்தகத்தின் மதிப்பு = ரூ.20/—

மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய பிரபாகரன் பிரிண்டிங், நிறுவத்தில் இரசீது புத்தகங்கள் அச்சிட்டுக் கொள்ளவும் அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.15,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 14**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் ஒரு சில இடங்களில் உருவாகும் மக்கும் குப்பைகளை வாகனங்கள் மூலம் எடுத்து அப்புறப்படுத்த இயலாத நிலை உள்ளது. எனவே அந்த இடங்களில் சின்டெக்ஸ் தொட்டி வைத்து மக்கும் குப்பைகளை உரமாக தயாரிக்க தோராய செலவினம் ரூ.50,000/–க்கு ஏழு இடங்கள் முதல் அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் – 15**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான வார்டு எண். 7 முதல் 33 வரையில் தனியார் வசம் ஒப்படைத்து தெரு விளக்குகளை பராமரிபபு பணிகளை மேற்கொள்ள வேண்டி 21.8.2018 அன்று வரப்பெற்ற 3 ஒப்பந்தபுள்ளிகளான 1) AMR Electrical Engineering corporation, Vellore 2) Sunrise Solar System, Kancheepuram, 3) Enoch Electrical, Nellikuppam. ஆகிய ஒப்பந்தபுள்களி டெக்னிகல் பிட் திறவு செய்யப்பட்டு ஒப்பு நோக்கு செய்தலில் வ.எண். 3 ன் ஒப்பந்தபுள்ளி வேலைக்கான தகுதி சான்றிதழ்கள் திறவு செய்யப்படாமல் இருந்ததை குறித்து 24.8.2018ல் தகுதி சான்றிதழ் சமர்ப்பிக்க கேட்டு 21.8.2018 அன்று அளிக்கப்பட்ட கடிதங்களில் எவ்விதமான தகுதி சான்றிதழ் அளிக்காமல் 27.8.2018 அன்று Prise Bid திறக்கப்பட்டதில் வரிசை எண். 3 நிறுவனத்தினரை தவிர மற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளி Prise Bid திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில் விவரம் கீழ்வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததாரர் விவரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | AMR Electrical Engineering corporation, Vellore | ரூ.50.79 | 1.51 சதவீதம் குறைவு |
| 2 | Enoch Electrical, Nellikuppam. | | 13.67 சதவீதம் அதிகம் |

குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவா. AMR Electrical Engineering corporation, Vellore, நிறுவனத்தினை ஏற்றிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட ஒப்பந்தாரர் 1.9.2018 முதல் பணி மேற்கொள்ளவும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 16

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4 பாசித் தெரு நீர்தேக்கதொட்டிக்கு பழவேலி நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் 250 mm ஏ.சி. பைப் நீஞ்சல் மடுவின் அடியில் குடிநீர் கசிவு ஏற்பட்டுள்ளதை சரி செய்ய 200 மீட்டர் நீளத்திற்கு பைப் மாற்றியமைக்க மதிப்பீடு ரூ.7.80 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 17

செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.9, கே கே. தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.70 இலட்சம் ஆகும். மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 18

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட குண்டூர் ஏரியில் இருந்து வெளிவரும் உபரி நீர் செல்லும் மழைநீர் வடிகாலும், கொளவாய் ஏரி மற்றும் மேலமையூர் ஏரியில் இருந்து வெளியேறும் மழைநீர் வடிகாலும், நகரின் மலைப் பகுதிகளில் இருந்து ஜெ.சி.கே. நகர் வழியாக களத்தூரரான் கால்வாய்க்கு செல்லும் கால்வாய்களை தூர் வார தோராய மதிப்பீடு ரூ.7.50 இலட்சம் ஆகும். மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 19

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பழவேலி தலைமை நீரேற்று நிலையத்தில் 1) தட்டான்மலை குடிநீர் திட்டம், 2) புதிய குடிநீர் திட்டம் 3) பழைய குடிநீர் திட்டம் ஆகியவற்றில் இயங்கும் மின் மோட்டார், ஸ்டார்டர் கேபிள்கள் Hope பைப்கள் மற்றும் ஜி.ஐ பைப்கள் பழுதுகள் நீக்கும் பணிக்கு 9.8.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்த புள்ளிகளை நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் விவரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருவா. ஆனந்த் எண்டர்பிரைசஸ், செங்கல்பட்டு | ரூ.5.00 | 0.76 சதவீதம் அதிகம் |
| 2 | திருவா. அப்பல்லோ எண்டர்பிரைசஸ், மறைமலை நகர். | | 0.07 சதவீதம் குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருவா. அப்பல்லோ எண்டர்பிரைசஸ் மறைமலைநகர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம். குடிநீர் பணியின் அவசியம் கருதி குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 20

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட தரைமட்ட தொட்டி பாசித் தெரு, பெரியமணியக்கார தெரு, சப்கலெக்டர் அலுவலகம், வடமலைப்பள்ளி குடிநீர் திட்டங்களில் உள்ளவற்றில் இயங்கும் மின் மோட்டார்கள் ஸ்டார்டர், கேபிள்கள் பழுதுகள் நீக்கும் பணிக்கு 9.8.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளை நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் விவரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருவா. ஆனந்த் எண்டர்பிரைசஸ், செங்கல்பட்டு | ரூ.5.00 | 1.16 சதவீதம் அதிகம் |
| 2 | திருவா. அப்பல்லோ எண்டர்பிரைசஸ், மறைமலை நகர். | | 0.03 சதவீதம் குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருவா. அப்பல்லோ எண்டர்பிரைசஸ் மறைமலைநகர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 21

நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் கடித ந.க.எண். 5064/2017/செம3 நாள் 6.12.2017ல் காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு வட்டம்/நகராட்சி வார்டு எண்.3, பிளாக் எண்.26 நகரளவு எண். 107ல் உள்ள மொத்த பரப்பு 3825.5 ச.மீ இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப் பிரிவினை வரன்முறைபடுத்தி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு வட்டம், செங்கல்பட்டு நகரம் ஜி.எஸ்.டி. ரோடு கதவு எண்.10ல் வசிக்கும் காலஞ்சென்ற திரு வி. ஏகாம்பரம் அவர்களின் பேரன்களும் காலஞ்சென்ற திரு இ. சீனிவாசன் அவர்களின் குமாரர்களான சுமார் 47 வயதுள்ள திரு எஸ். சதீஷ்குமாரன் என்கின்ற எஸ். சதீஷ்குமார் (PAN AA1PS8151N ) (1) மற்றும் 44 வயதுள்ள திரு எஸ். பிரதீஷ்குமார் (PAN AFDPP0032P) (2) ஆகியோர் நகராட்சிக்கு செங்கல்பட்டு வட்டம், செங்கல்பட்டு நகரம் நெம்பர் 258 குண்டூர் கிராமத்தில் சர்ச்ரோடு பிளாக் எண். 26 வார்டு எண்.3 ஆர்.எஸ். எண். 84/1 பழைய சர்வே எண். 427 க்கு புதிய நகரளவு எண். 107ல் அடங்கிய விஸ்தீரணம் 1.00 ஏக்கர் (ஒரு எக்கர்) நிலத்தை உட்பிரிவுகளாக பிரித்து ஏகாம்பரம் அவின்யூ பேஸ்–2 ல் இணைக்கப்பட்ட வரைபடத்தில் உள்ள திறந்த வெளி இடத்தினை நகராட்சிக்கு தானமாக வழங்க உத்தேசித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களால் ம,வ/ந.ஊ.து.இ(செம) எண். 218/(ஆர்)/2017ல் அனுமதி பெறப்பட்டு வரைபடத்தின்படி சாலை நீட்டிப்பு–1– 446 சதுரஅடி சாலை நீட்டிப்பு–2 –549 சதுரஅடி மொத்தம் 995 சதுரஅடி திறந்தவெளி ( Open Speace Reservation) ஒதுக்கீடு இடம் 1621 சதுர அடியும் ஆக 2616 சதுடி அடி இடத்தினை செங்கல்பட்டு நகராட்சிக்கு 1–எண். இணை சார் பதிவாளர், செங்கல்பட்டு அவர்களால் –1 புத்தகம் 2018 வருடம் 1587 ஆவனம் 29 தாள்களைக் கொண்ட 1 முதல் 6 வரையிலான விவரப்படி தானப் பத்திரத்தில் நகராட்சியிடம் வழங்கப்பட்டதை மன்றத்தின் ஒப்புதலுக்காகவும், பதிவிற்காகவும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் பதிவு செய்யலாம்.
2) ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் – 22

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் TURIP 2018–19 திட்டத்தின் கீழ் ரூ.200.00 இலட்சத்திற்கு கீழ்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் மழைநீர்வடிகால் மற்றும், கல்வெட்டு, தார்சாலை அமைக்கும் பணிக்கு மன்றத்தின் பார்வைக்கு அனுப்பப்படுகிறது.

| | மழைநீர் வடிகால் | | சாலைகள் |
|---|---|---|---|
| 1 | அனுமந்தபுத்தேரி = 360 மீட்டர் | 1 | பழைய ஜி.எஸ்.டி சாலை = 240 மீட்டர் |
| 2 | மதுரைவீரன் கோயில் தெரு = 200 மீட்டர் | 2 | முனிசிபல் காலனி = 100 மீட்டர் |
| 3 | செங்கை ராயல் சிட்டி = 350 மீட்டர் | 3 | மதுரைவீரன் கோயில் தெரு = 200 மீட்டர் |
| 4 | அழகேசன் ரோடு = 200 மீட்டர் | 4 | வரதராஜன் தெரு = 100 மீட்டர் |
| 5 | டி.கே.எம். ரோடு = 200 மீட்டர் | 5 | குண்டூர் = 230 மீட்டர் |
| 6 | குண்டூர் ரோடு = 200 மீட்டர் | 6 | முத்துராஜன் காலனி = 200 மீட்டர் |
| 7 | தேவராஜனார் தெரு = 240 மீட்டர் | 7 | ஜெ.சி.கே. நகர் = 150 மீட்டர் |
| 8 | லியோ கார்டன் = 100 மீட்டர் | | |
| | **மொத்தம் = 1850 மீட்டர்** | | **மொத்தம் = 1220 மீட்டர்** |

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 23**

செங்கல்பட்டு நகரத்தில் உள்ள ஸ்ரீ ரங்கா மருத்துவமனை நிர்வாகம் இந் நகராட்சிக்குட்பட்ட 32வது வார்டில் சாலை ஒரு பூங்கா அமைத்து ஓர் ஆண்டிற்கு பராமரிக்க விருப்பம் தெரிவித்துள்ளதால் ஓர் ஆண்டிற்காக தற்காலிக அனுமதியினை நகராட்சி நிபந்தனைகளின் பேரில் அந் நிர்வாகத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

அனுமதி அளிக்கலாம்.

தனி அலுவலர்,
செங்கல்பட்டு நகராட்சி.